DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 101/2018

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | புருசோத்தமன் |
|---|---|
| Father / Husband Name | சிட்டாகரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.03.2025

**முதல் விசாரணை:**

1. என்னிடம் காட்டப்படும் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**2.** புகார்தாரர் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை என்னுடையது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் பொய் என்றாலும் நான் எதிரியிடம் சீட்டு போடவில்லை என்றாலும் சரியல்ல. நான் மேற்படி சீட்டுக்காக தான் காசோலையை செக்யூரிட்டியாக கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சீட்டு போட்டதை காட்டும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு காசோலையை நான் தான் புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. புகார்தாரர் எனது காசோலையை மோசடியாக பயன்படுத்தியிருந்தால் நான் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்தபோது தான் காசோலையை அவர் மோசடியாக பயன்படுத்தியது எனக்கு தெரியவந்தது. காசோலை திருப்பப்பட்ட விவரம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் காசோலை பற்றிய விவரம் எனக்கு முன்னரே தெரியும் என்றால் சரியல்ல. காசோலை வங்கியில் செலுத்தப்பட்ட தேதியில் எனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதால் தான் காசோலை திருப்பப்பட்டது என்றாலும் வங்கி அலுவலர் தவறுதலாக காசோலையை திருப்பவில்லை என்றாலும் சரியல்ல. 2017 ம் வருடம் நான் குடும்ப செலவிற்காக புகார்தாரரிடம் இருந்து ரூபாய் 3 லட்சம் கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி ரூபாய் 3 லட்சம் கடனுக்காக தான் 10.04.2018 தேதியிட்ட

காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனவே நான் காசோலை மோசடி வழக்கில் தண்டிக்கப்படவேண்டிய குற்றவாளி என்றால் சரியல்ல. எனது தரப்பு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எனது வாக்குமூலம் ஏற்கப்பட கூடியதாக இல்லை என்றால் சரியல்ல.